# அடிப்படை உரிமைகள்

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

# அடிப்படை உரிமைகள்

ISBN 978-955-8929-24-7

முதற் பதிப்பு : 2015

ஆலோசகர்கள்: : சட்டத்தரணி நிமால் ஜி புஞ்சிஹேவா
சட்டத்தரணி சமந்தி ஜயமான பரணகம

ஆக்கம்: : சட்டத்தரணி மேனகா ஹேரத்
சட்டத்தரணி க. கபிலன் வில்லவராஜன்

உதவி : துஷாரா ஜீவந்தி

அட்டைப்படம் : சாருண்யா குலதிலக

பதிப்பு : விக்கும் கிராபிக் இல. 33, மாயா மாவத்தை,
பத்திரகொட,மகரகம

வெளியீடு : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
இல. 165, கின்சி வீதி, கொழும்பு 08.

ISBN 978-955-8929-24-7

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மக்களிற்கான செயற்றிட்டம்

# அடிப்படை உரிமைகள் என்றால் என்ன ?

மனித உரிமைகளானவை அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும்போது அது அடிப்படை உரிமையாகக் கருதப்படுகின்றது. உலகின் நவீன அரசியலமைப்புகளில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டுவருகின்றன. அவ்வாறு உள்ளடக்கப்படுதலானது சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகளானவை மனித உரிமைகளுக்கு நிகராக அமைந்தாலும் அவற்றுக்கு இடையில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அடிப்படை உரிமைகள் சட்ட ரீதியான தண்டனைகளைக் கொண்டிருப்பதுடன் நீதிமன்றத்தில் அச்சட்டத்தை அமுல்நடாத்திக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. மனித உரிமைகளுக்கு அத்தகைய தண்டனையைப் மற்றும் நீதிமன்றத்தின் முன்னால் சட்டத்தை அமுல்நடாத்திக்கொள்வதற்குரிய ஆற்றல் மிகவும் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளன.

அதேவேளை இவற்றுக்கு இடையில் வித்தியாசமாக மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியாக மேன்முறையீடு செய்யுக்கூடியதாகவிருக்கும். ஆனால் அடிப்படை உரிமைகள் ஒரு நாட்டுக்கு தனித்துவமானவையென்பதோடு நாட்டின் வரலாறு மற்றும் கலாசாரம் என்பவற்றின் அடிப்படையில் அவை உருவாகின்றன. மனித உரிமைகள் பெரும்பாலும் அடிப்படையானதாகவும் சகல மனிதப்பிறவியினருக்கும் எதுவித பாரபட்சமின்றி காணப்படுவதோடு அவை உலகலாவியரீதியில் பிரயோகிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது.

மேலும் அரச விவகாரங்களில் தனிப்பட்டவர்களின் முக்கியத்துவத்தை அடிப்படை உரிமைகள் அங்கிகரிக்கின்றன. அதன் மூலம் சகல பிரஜைகளுக்கும் உயிர் வாழ்வதற்கான சுதந்திரம், விடுதலை, மகிழ்ச்சி போன்ற உரிமைகளை அவர்கள் விரும்பியவாறு அனுபவிக்கக்கூடியதாகவுள்ளது. அவை நேரடியாகவே அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக நெறிப்படுத்தப்படுகின்றன. இவ் அடிப்படை உரிமைகளின் ஊடாக அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான அதிகாரமும் செயற்பாடுகளும் வரையறுக்கப்படுகின்றன.

இந்தியாவைச் சேர்ந்த நீதியரசர் திரு. பகவதீ அவர்கள் அடிப்படை உரிமைகளை பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார். "அடிப்படை உரிமைகளுக்கு அரசியலமைப்பில் விசேட இடம் அளிக்கப்பட்டு இருக்கின்றமையானது உலகலாவிய ரீதியில் அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் மனச்சாட்சியாகவும், அரசியலமைப்பின் ஆன்மாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.[1] "

[1] மேனகா காந்தி எதிர் ஐக்கிய இந்தியா

## இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்

இலங்கையானது, அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பல வழிகளில் கடப்பாடுள்ளது. மனித உரிமைகள் இலங்கை அரசியலமைப்பிலும் உள்ளடக்கபட்டுள்ளன. இலங்கை அரசியலமைப்பின் மூலம் ஒட்டுமொத்த உலக வாழ் மக்களைப் போலவே இலங்கை மக்களின் அபிமானம் மற்றும் செழிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக சுதந்திரம், சமத்துவம், ஒப்புறவு, அடிப்படை உரிமைகள் மற்றும் நீதித் துறையின் சுயாதீனத் தன்மை என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

1947 ஆம் ஆண்டின் சோல்பரி அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் நேரடியாகவே உள்ளடக்கப்படாவிட்டாலும் அதன் 29(2) உறுப்புரையின் மூலம் இன அல்லது மதச் சுதந்திரம் மீறப்படும் வகையில் பாராளுமன்றம் சட்டங்களை வகுப்பதனை வரையறுப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் சிறுபான்மையின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனலாம்.

முதற்தடவையாக அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயம் 1972 ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பிலேயே உள்ளடக்கபட்டது. இருப்பினும் அதிலே அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அதற்கான சட்ட ரீதியாக பரிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு முறையியல் காணப்படவில்லை. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நாட்டில் ஏற்படுகின்ற அவசர நிலைமையின் கீழ்கூட இவற்றை வலிந்து தடுத்து நிறுத்துவற்கு அவகாசம் கிடையாது.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய ஓர் அத்தியாயம் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அதில் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது சட்ட ரீதியான பரிகாரத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொறிமுறையாக இலங்கையின் அதிஉயர்நிலை நீதிமன்றமாகிய உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையின் பிரகாரம் “இலங்கைக் குடியரசின் இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமையானது ஆட்சித் தத்துவங்கள் (நிறைவேற்றுத் துறை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை) அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்”. அரசியலமைப்பின் மூலம் ஒரு நாட்டை ஆட்சி செய்ய வேண்டிய பொதுவான சட்ட ரீதியான சட்டகமொன்று வழங்கப்பட்டுள்ளது. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுச் சட்டங்கள், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றின் மீது அடிப்படையாகவும் பெறுமதிகள் ஊடாகவும் அமைந்துள்ளது.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 4 (ஈ) உறுப்புரையின் பிரகாரம் “அரசியலமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள், அரசாங்கத்தின் எல்லா அங்கங்களாலும் மதிப்பளிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் முன்னேற்றப்படவும் வேண்டும் என்பதோடு, அவை, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய முறையிற்றவிரவும் அத்தகைய அளவுக்குத் தவிரவும் சிறுக்கப்படுதலோ, மட்டுப்படுத்தப்படுதலோ, மறுக்கப்படுதலோ ஆகாது. இதற்கு மேலதிகமாக VI ஆம் அத்தியாயமான அரச கொள்கைகளின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் உறுப்புரை 27(2)(அ) இல் “அரசானது எல்லா ஆட்களும் தமது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் முழுமையாக அனுபவித்தலை பூர்த்தி செய்வதற்கு உறுதிபூண்டுள்ளது.” என்பதினை வலியுறுத்துகின்றது.

1978 அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 14 வரையிலான உறுப்புரைகளில் அடிப்படை உரிமைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதன் ஊடாக அவை அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளன. அட்டவணை 01 இல் III ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் சுருக்கமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்த அத்தியாயத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளதோடு பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளிற்கு ஒப்பீட்டளவில் குறைந்த கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

| உறுப்புரை | உரிமை/சுதந்திரம் |
|---|---|
| உறுப்புரை 10 | • சிந்தனை செய்யும் சுதந்திரம்<br>• மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம்<br>• மதச் சுதந்திரம் |
| உறுப்புரை 11 | • சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்<br>• கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்<br>• கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான தண்டனைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம் |
| உறுப்புரை 12 | • சட்டத்தின் முன்பு சமத்துவத்தைப் பெறுவதற்கான உரிமை<br>• ஆட்கள் எல்லோரும் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கான உரிமை<br>• இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் போன்ற காரணங்களினால் ஓரங்காட்டப்படுதலுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான உரிமை |
| உறுப்புரை 13 | • சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கவன்றி, ஆளெவரும் கைது செய்யப்படலாகாது.<br>• கைது செய்யப்படுவதற்கான காரணம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.<br>• சட்டத்தில் குறிப்படப்பட்டுள்ளவாறு நீதிபதியினால் ஆக்கப்படும் கட்டளைக்கிணங்கவன்றி கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம். |

| | |
|---|---|
| | • தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்படும் எவரேனும் ஆள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்பதற்கு கொண்டுள்ள உரிமை<br>• சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலமாகவன்றி மரண தண்டனையினால் அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலாகாது.<br>• ஆளொவ்வருவரும் அவர் குற்றவாளியென எண்பிக்கப்படும் வரை சுத்தவாளியென ஊகிக்கப்படுதல் வேண்டும். (குற்றமற்றதன்மையின் ஊகம்)<br>• புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாகவிருந்திராத (குற்றவியல் தவறாகவிருந்திராத) ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதலாகாது. |
| **உறுப்புரை 14** | • பேச்சுச் சுதந்திரம்<br>• வெளியிடுதலுக்கான சுதந்திரம்<br>• கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம்<br>• அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்<br>• ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்<br>• தொழிற் சங்கமொன்றை அமைக்கவும் அதிற் சேரவும் உள்ள சுதந்திரம்<br>• தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் ஆன சுதந்திரம்<br>• ஏதேனும் சட்டமுறையான முயற்சியில், உயர் தொழிலில் வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்.<br>• இலங்கை முழுவதிலும் தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம்<br>• விரும்பும் இடத்தில் வசிப்பதற்கான சுதந்திரம்<br>• இலங்கைக்குத் திரும்பி வருவதற்கான சுதந்திரம் |
| **உறுப்புரை 14 (அ)** | • தகவல்களை அணுகுவதற்கான சுதந்திரம் |

அட்டவணை 1: இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் சுருக்கம்

அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளிற்கு அமைய 10 மற்றும் 11 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் பரிபூரண உரிமைகளாகும். எதுவித மாற்றமுமின்றி அந்த உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஏக உரிமை உள்ளது. அதேவேளை, 12, 13, மற்றும் 14 ஆகிய உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் சம்பந்தமாக சிற்சில வரையறைகள் பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, 10, 11, 12(1), 12(3), மற்றும் 13 ஆகிய உறுப்புரைகள் சகல ஆட்களுக்கும் ஏற்புடையதான உரிமைகளாகும். 12 (2) மற்றும் 14 ஆம் உறுப்புரைகள் பிரஜைகளுக்கு மட்டும் ஏற்புடையதான உரிமைகளாகும்.

## வரையறைகள்

அரசியலமைப்பின் 15 ஆம் உறுப்புரையின் பிரகாரம் 12 தொடக்கம் 14 வரையிலான (அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள) உறுப்புரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு தேசியப் பாதுகாப்பு, பொருளாதாரத்தின் நலன், இன,

மதச் சுமூகவாழ்வு மற்றும் பொதுமக்கள் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் என்பவற்றை பாதுகாத்தல் போன்ற விடயங்களின் காரணமாக வரையறைகள் விதிக்கப்படுகின்றன.

அரசியலமைப்பின் 16 ஆம் உறுப்புரையின் பிரகாரம் 1978 அரசியலமைப்பு வலுவுக்கு வர முன்பு காணப்பட்ட எழுத்திலான சட்டங்கள், எழுத்தில்லாச் சட்டங்கள் எல்லாம் அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இருப்பினும் அந்த முற்போந்த சட்டங்கள் செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளன.

### நிவாரணங்கள்

அரசியலமைப்பின் 17 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அல்லது நிருவாக நடவடிக்கை மூலம் மீறப்பட்டிருப்பின் அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் பிரகாரம் மீறல் இடம்பெற்று 1 மாதத்திற்குள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். அதற்கு மேலதிகமாக உள்நாட்டுச் சட்டங்களின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) என்போருக்கு அடிப்படை உரிமை மீறலின்போது முறைப்பாடு செய்ய முடியும். எவ்வாறாயினும் அரசியலமைப்பில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் தனியார் துறையிலிருந்து இடம்பெறுகின்ற அடிப்படை உரிமை மீறப்படுதல்கள் தொடர்பாக நிவாரணம் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை மக்களுக்குக் கிடையாது.

## ஆட்சித்துறை மற்றும் நிருவாக நடவடிக்கைகள்

அடிப்படை உரிமை மீறலின்போது ஒருவர் பொறுப்புக்கு உள்ளாவது அது ஆட்சித்துறை அல்லது நிருவாகச் செயற்பாடாக அமையும் பட்சத்தில் மட்டுமேயாகும். ஆட்சித்துறை அல்லது நிருவாகத்துறை என்ற பொருளுக்குள் தனியார் துறை, நீதித்துறை மற்றும் பாராளுமன்றம் என்பவை உள்ளடங்க மாட்டாது. பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்தர் அல்லது அரசாங்க நிறுவனமொன்றினால் தமது பதவி அதிகாரம் தவறாக பயன்படுத்தப்படுகின்றமை அல்லது அதிகாரத்தை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் மீது உருவாகின்ற அடிப்படை உரிமை மீறல்கள் இங்கே ஆராய்ந்து பார்க்கப்படுகின்றன.

ஆட்சித்துறை நடவடிக்கைகளின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்களாவன,

- சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள்
- மாகாண சபை, மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைச் செயலாளர்கள்

- பொலீஸ் திணைக்களம்
- முப்படையினர்

நிருவாக நடவடிக்கைகளின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்களாவன,

- சகல திணைக்களங்களும்
- அதிகார சபைகள்
- கூட்டுத்தாபனங்கள்
- நியதிச்சட்ட சபைகள்
- நியதிச் சட்ட ஆணைக்குழுக்கள்
- 50% வீதத்தைவிட அதிகமான அரசாங்கப் பங்குகளைக் கொண்ட கம்பனிகள்

## அடிப்படை உரிமைகளின் வளர்ச்சி

உலகில் புதிதாக உருவாகின்ற நவீன அரசியலமைப்புக்களில் உள்ளடக்கப்படுகின்ற அடிப்படை உரிமைகளில் பல புதிய உரிமைகள் உள்ளடக்கப்பட்டு வருவதைத் தற்போது காணமுடிகின்றது. மேலும் உயர் நீதிமன்றங்கள் பல்வேறுபட்ட கோணங்களில் ஆராய்ந்து விரிவான புதிய பொருள்கோடல்களை அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக வழங்குவதன் மூலமும் மேற்படி உரிமைகளில் வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. உலகில் முதன்முதலில் மனிதனின் சுதந்திரத்திற்கும் அரசியல் வாழ்க்கைக்கும் உள்ள உரிமை தொடர்பாக கலந்துரையாடி சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் வளர்ச்சி பெற்று அவை அடிப்படை உரிமைகளுக்குள் உள்ளடங்கின. பின்னர் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீது உலகின் கவனம் செலுத்தப்பட்டு அது தொடர்பாக கலந்துரையாடல்கள் ஆரம்பமாயின. அத்துடன் நின்றுவிடாத உலக புத்திஜீவிகள் தனிநபரின் உரிமைகளையன்றி கூட்டு உரிமைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தி குழு உரிமைகள் தொடர்பாக அடிப்படை உரிமைகள் ஊடாகக் கலந்துரையாடி கூட்டு உரிமைகளின் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன் பொருட்டு உயர்நீதிமன்றம் விலை மதிப்பற்ற பங்களிப்பினை வழங்கியுள்ளது. இதற்கு சிறந்த உதாரணமாக இந்தியாவின் பொது நலன் பற்றிய வழக்குகளை குறிப்பிடலாம்.

மேலும் தற்போது மனித இனத்தின் நலனோம்பல் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படுவதோடு அடிப்படை உரிமைகளின் ஊடாக அது தொடர்பாக புதிய கோணங்களில் ஆராய்ந்து வளர்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்புதிய போக்குகள் பொதுமக்களுக்கு இடம்பெறுகின்ற அடிப்படை உரிமை மீறல்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு பேருதவியைப் பெற்றத்தந்து அடிப்படை உரிமைகள் தொடர்பாக புதிய கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு உலக கவனத்தை ஈர்த்து வருகின்றன.

## அத்தியாயம் III

# அடிப்படை உரிமைகள்

**சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மதச்சுதந்திரம்**

10. ஆளொவ்வொருவரும், தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம்**

11. ஆளெவரும் சித்திரவதைக்கு, அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது.

**சமத்துவத்துக்கான உரிமை**

12. (1) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள்.

(2) இனம், மதம், மொழி. சாதி, பால், அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது:

ஆயின், பகிரங்க சேவையில், நீதித்துறைச் சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில், அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் சேவையில் உள்ள ஏதேனும் ஊழியத்திற்கான அல்லது பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் மொழியை அறிந்திருத்தல் நியாயமாக அவசியமானதாகவுள்ளவிடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான தகைமையான அம்மொழியில் போதிய அறிவை நியாயமான காலத்தினுள் பெறுதல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஊழியத்திற்கான அல்லது பதவிக்கான பணிகளுள் எவற்றையும் ஏதேனும் மொழியை அறிந்திருந்தால் தவிர வேறு விதத்தில் நிறைவேற்ற முடியாமலிருக்குமிடத்து, அத்தகைய ஏதேனும், ஊழியத்துக்கான அல்லது பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான தகைமையாக அம்மொழியில் போதிய அறிவை உடையவராக இருத்தல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) எந்த ஆளும், இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும், கடைகள், பொது உணவுச் சாலைகள், விடுதிகள், பொதுக் களியாட்டவிடங்கள், தனது மதத்துக்குரிய பொது வழிபாட்டிடங்கள் என்பவற்றிற்குச் செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்துக்கு, பொறுப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு உட்பட்டவராதலாகாது.

(4) இவ்வுறுப்புரையிலுள்ளதெதுவும், பெண்களின், பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக, சட்டத்தின் மூலம், துணைநிலைச் சட்டவாக்கத்தின் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்படுவதைத் தடுத்தலாகாது.

**எதேச்சையாகக் கைதுசெய்யப்படாமலும் தடுத்துவைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரம்**

13. (1) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்கவன்றி, ஆளெவரும் கைதுசெய்யப்படுதலாகாது. கைது செய்யப்படுவதற்கான காரணம் கைது செய்யப்படும் எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டுக்காவலில் வைத்திருக்கப்படும், தடுத்துவைத்திருக்கப்படும், அல்லது வேறுவகையில் சொந்தச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வோராளும், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க மிக்க அண்மையிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்னா் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க அத்தகைய நீதிபதியினால் ஆக்கப்படும் கட்டளைப்படியன்றியும் அதன் நியதிகளுக்கிணங்கவன்றியும், தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதலோ, தடுத்துவைக்கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது.

(3) தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எவரேனுமாள், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணிமூலம் உரைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலமாகவன்றி, ஆள் எவரும், மரண தண்டனையினால் அல்லது மறியற் தண்டனையினால் தண்டிக்கப்படுதலாகாது. புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறும்வரையில் ஆளொருவரைக் கைதுசெய்துவைத்திருத்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரது சொந்தச் சுதந்திரத்தை வேறுவகையில் பறித்தல் தண்டனையாக அமைதலாகாது.

(5) ஆளொவ்வொருவரும், அவர் குற்றவாளியென எண்பிக்கப்படும்வரை, சுத்தவாளியென ஊகிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், குறிப்பிட்ட நிகழ்வுகளை எண்பிப்பதற்கான பொறுப்பை குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர்மீது சட்டம் சுமத்தலாம்.

(6) புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாகவிருந்திராத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக, ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது என்பதுடன், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டத்திலும் பார்க்க கடுமையான தண்டமெதுவும் அத்தகைய ஏதேனும் தவறுக்கு விதிக்கப்படுதலுமாகாது.

தேசங்கள் என்ற சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் பொதுவான நெறிகளுக்கிணங்க எச்செயல் அல்லது செய்யாமை, அது புரியப்பட்ட நேரத்தின்போது குற்றவியலானதாக இருந்திருக்குமோ, அச் செயலுக்காக அல்லது செய்யாமைக்காக எவரேனும் ஆளை விளங்குதலையும் அவருக்குத் தண்டனையளித்தலையும் இவ்வுறுப்புரையிலுள்ள எதுவும் பங்கப்படுத்துதலாகாது.

தவறொன்றுக்கு ஆகக்குறைந்த தண்டமொன்றை விதிக்கும்படி தேவைப்படுத்துதல், அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய தவறுக்கென விதிக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டத்தை அத்தகைய தண்டம் விஞ்சுவதாயில்லாதிருப்பின், இவ்வுறுப்புரையின் மீறுகையாக இருத்தலாகாது.

(7) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் அல்லது 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்திய-இலங்கை உடன்படிக்கை (செயற்படுத்தல்) சட்டத்தின் அல்லது அவற்றிற்குப் பதிலாக ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட அகற்றற் கட்டளையின் காரணமாக அல்லது துறைகடத்தும் கட்டளையின் காரணமாக ஆளொருவரைக் கைதுசெய்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரின் சொந்தச் சுதந்திரத்தை வேறுவகையில் பறித்தல் இவ்வுறுப்புரையை மீறுவதாக அமையாது.

**பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், முயற்சி செய்வதற்கான சுதந்திரம், தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம் முதலியன**

14. (1) ஒவ்வொரு பிரசையும் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராவார்:-

(அ) வெளியிடுதலுட்படப் பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும்

(ஆ) அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

(இ) ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்

(ஈ) தொழிற் சங்கமொன்றை அமைக்கவும் அதிற் சேரவும் உள்ள சுதந்திரம்

(உ) தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும் சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம்

(ஊ) தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் ஆன சுதந்திரம்

(எ) ஏதேனும் சட்டமுறையான முயற்சியில், உயர்தொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில்முயற்சியில் தானாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கான சுதந்திரம்

(ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கும் ஆன சுதந்திரம் அத்துடன்

(ஐ) இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான சுதந்திரம்

(2) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராக இல்லாதிருப்பவரும், இவ்வரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர்முன்னர் இலங்கையில் நிரந்தரமாகவும் சட்டப்படியும் வதிவிலிருந்தவரும், தொடர்ந்து

அவ்வாறு வதிவிலிருப்பவரும் ஆன ஆளொருவா், அரசியலமைப்பு தொடங்கிய திலிருந்து பத்து ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதிக்கு இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் வெளிப்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

## தகவலை அணுகுவதற்கான உரிமை

14 (அ) தகவலை அணுகுவதற்கான உரிமை [2]

(1) ஒவ்வொரு பிரசையும், பிரசையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதும் பின்வருபவா்களினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலாகவுள்ளதுமான ஏதேனும் தகவலை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டக்குழு,

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சா்கள் சபையின் அமைச்சா் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாணசபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு,

(இ) ஏதேனும் உள்ளூரதிகாரசபை, அத்துடன்

(ஈ) இப்பந்தியின் (அ) (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்று தொடா்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைததிருக்கின்ற வேறு எவரேனும் ஆள் ."

(2) ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்காக, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவா்களின் நற்கீா்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்கதன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைத் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையைப் பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்காக அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச் சாா்பற்ற

[2] அரசியலமைப்புக்கான 19 வது திருத்தம்

தன்மையையும் பேணுவதற்காக மற்றும் தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன்கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித் துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எதுவும், இவ்வுறுப்புரையினால் பிரகடனம்செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமை மீது இடப்படுதல் ஆகாது.

(3) இவ் உறுப்புரையில் "பிரசை"" என்பது கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றை அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றை அத்தகைய குழுவின் நான்கில் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசைகளாக இருப்பின் அதையும் உள்ளடக்குகின்றது."

## அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள்

15. (1) 13 (5) ஆம், 13 (6) ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப்பாதுகாப்பின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப் பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளையும் உள்ளடக்கும்.

(2) 14 (1) (அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மானநட்டம் அல்லது தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(3) 14 (1) (ஆ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(4) 14(1) (இ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு

மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன்கருதி அல்லது தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(5) 14 (1) (எ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதியோ அல்லது பின்வருவன தொடர்பிலோ சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் அதாவது -

(அ) ஏதேனும் உயர் தொழிலைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் முயற்சியை, வியாபாரத்தை, தொழிலை அல்லது தொழில் முயற்சியைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமான உயர் தொழில்சார், தொழினுட்பம்சார், கல்விசார், நிதிசார் தகைமைகளும் வேறு தகைமைகளும் என்பன தொடர்பிலும், அத்தகைய அடிப்படை உரிமைக்கு உரித்துடைய ஆட்களுக்கு உரிமமளித்தலும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் என்பன தொடர்பிலும் அத்துடன்

(ஆ) முழுக்க முழுக்க பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது பகுதியளவில் பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது வேறுவகையிலோ ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை, கைத்தொழிலை, சேவையை அல்லது தொழில் முயற்சியை அரசு, அரச முகாமை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் கொண்டுநடாத்துதல் தொடர்பிலும்.

(6) 14 (1) (ஏ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி, சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(7) 12 ஆம், 13 (1) ஆம், 13 (2) ஆம், 14 ஆம் உறுப்புரைகளினால் வெளிப் படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா அடிப்படை உரிமைகளினதும் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பனவற்றின் நலன்கருதி, அல்லது மற்றவர்களின் உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றிற்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது சனநாயகச் சமூகத்தின் பொதுச் சேமநலத்தின் நீதியான தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காகச் சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான

அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங் களுக்காக "சட்டம்" என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

(8) 12 (1) ஆம், 13 ஆம், 14 ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், அவ்வுரிமைகளை ஆயுதந்தாங்கிய படைகள், பொலிசுப்படை, பொது அமைதிபேணும் பொறுப்புடைய ஏனைய படைகள் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு ஏற்புடையனவாக்கும்போது, அத்தகைய படையுறுப்பினர் தத்தமது கடமைகளை முறையாகப் புரிதல், அவர்கட்கிடையே ஒழுக்கக் கட்டுப்பாட்டினைப் பேணுதல் என்பனவற்றின் நலன்கருதிச் சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

## இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்தில்லாச்சட்டங்கள் எல்லாம் தொடர்ந்து வலுவிலிருத்தல்

16. (1) இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில் எவரேனும் ஆளை, இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவிதமான ஒரு தண்டனைக்கேனும் உள்ளாக்குதல், இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகாது.

## ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கெதிரான பரிகாரம்

17. ஆளொவ்வொருவரும், இந்த அத்தியாயத்தினது ஏற்பாடுகளின் கீழ் அவருக்குரித்தாகவுள்ள அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அல்லது நிருவாக நடவடிக்கை மூலம் மீறப்பட்டமை தொடர்பில் அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் 126 ஆம் உறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.